மாநிலத்தின் நிதி நிலைமையை முன்னிட்டு இப்பரிந்துரையைப் பின்னர் ஆய்வு செய்யலாமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர சலவை, சவரத்தொழில் நிலையங்கள் கூட்டுறவு முறையில் அமைப்பதற்கான குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

Suriliar Hydro Electric Scheme

* 385 Q.—THIRU N. K. PALANISAMI :
THIRU P. MALAICHAMY : Will the Hon. the Minister forElectricity be pleased to state :

(a) whether any decision has been taken up in regard to Suriliar Hydro Electric Scheme; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) தமிழ்நாடு மின் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட, சுருளியாறு புனல்மின் திட்டம் பற்றிய விரிவான அறிக்கைக்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள சுருளியாறு, நீரைப் பயன்படுத்தி விசை உற்பத்தி செய்ய, இத்திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்திற்காகும் செலவு ரூ. 617 லட்சமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் கீழ்த் திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையம் 35 மெ. வா. நிறுவப்பட்ட திறனளவு உடையதாக இருக்கும். இத்திட்டம் பற்றிய விரிவான அறிக்கை குறித்துத் தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்காகவும் அதற்குத் திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெறுவதற்காகவும் இந்திய அரசைச் சேர்ந்த மத்திய நீர் மின் குழுவிற்கு 26—5—70 அன்று அது அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய நீர் மின் குழுவின் அனுமதியும் திட்டக் குழுவின் ஒப்புதலும் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆறு கோடி ரூபாய் திட்டத்தில் இந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மொத்தத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆறு கோடி பதினேழு இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வளவு என்று பிரித்துச் சொல்ல இயலாது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, எப்பொழுது முழுமையாக வேலை தொடங்கப்படுமென்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வெகு விரைவில்.

திரு. கே. பி. கோபால் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் சுருளியாற்றினால் பாசனம் நடைபெறும் இடங்கள் பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதிலிருந்து பிரிகின்ற நதிகள் (டிரிபியூடரிஸ்) மூலம் பசானம் நடைபெறுபவை பாதிக்கப்படாது.